

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் நகர் பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவாக்கத்தை நேற்று சென்னையில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வினை பெரம்பலூர் தந்தை ஹேரண்ஸ் ரோவர் தொடக்கப்பள்ளியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் சஅருண்ராஜ் ஆகியோர் நேரலையில் பார்வையிட்டு பின்பு மாணவர்களுக்கு காலை உணவு உணவினை வழங்கி, மாணவர்களுடன் அமர்ந்து சிற்றுண்டி சாப்பிட்டனர். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க.வரதராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், நகர்மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், நகர் மன்ற துணைத் தலைவர் து.ஆதவன்,மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், உள்ளிட்டோர் உள்ளனர் ,

### உயர் கல்வித்துறை சார்பில்

# ரூ.51.04 கோடியில் கல்விசார் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக. 27 -**

**முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.08.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் கல்லூரி, அழகப்பா பல்கலைக்கழகம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் 51 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்கள், வகுப்பறைக் கட்டடங்கள், தேர்வுக் கூடம், ஆய்வகக் கட்டடங்கள், புத்தாக்க வளர் மையம் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல், “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில “புதுமைப் பெண்” திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில “தமிழ்ப்புதல்வன்” ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

உயர்கல்வித் துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில், மதுரை மாவட்டம், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 3 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறைகள்,

2 ஆய்வகங்கள் மற்றும் 5 கழிவறைத் தொகுதிக் கட்டடங்கள்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தேர்வுக்கூடம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகத்தில், 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புத்தாக்க வளர் மையம்;

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 5 கோடியே 31 இலட்சம்ரூபாய்செலவில்கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைகள் மற்றும் 5 ஆய்வகக் கட்டடங்கள்;

திருநெல்வேலி மாவட்டம், மானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 12 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் திருநெல்வேலி, ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 3 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 வகுப்பறை கட்டடங்கள்;

திருவாரூர் மாவட்டம், குடவாசல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடம்; சென்னை வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரியில் 5 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் இதர கட்டடங்கள்;

என மொத்தம் 51 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித்துறை சார்ந்த கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ. சங்கர், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி. ஜெ. இன்னசன்ட் திவ்யா, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருவாரூர் மாவட்டத்திலிருந்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ. இராமலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் வ. மோகனச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. - பா.ம.க., த.வெ.க. உள்பட 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலை!

*காஞ்சிபுரம், ஆக. 27 -*

*அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த இளைஞர்கள் தி.மு. கழகத்தில் இணையும் நிகழ்ச்சி உத்திரமேரூர் அடுத்த சாலவாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை நடந்தது.*

*இதில் சாலவாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட, குண்ணவாக்கம், பாண்டவாக்கம், வெண்டிவாக்கம், படூர், அமராவதி பட்டினம், அருங்குன்றம், புலிப்பாக்கம், ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த, அதிமுக கிளைக் கழகச் செயலாளர்கள் சங்கர்,பார்த்திபன்,பாஸ்கர், தங்கராஜ்,பிரகாஷ்,செல்வம், தலைமையில் 100க்கும் மேற்பட்டோர், அதிமுக மகளிர் அணி நிர்வாகிகள் கோகிலா, மீனா, தலைமையில் 50க்கும் மேற்பட்டோர், பாமக ஒன்றிய செயலாளர் நரேந்திரன், அஜய், அமர்நாத், குப்பன், தலைமையில் 200க்கும் மேற்பட்டோர், புரட்சி பாரதம் கட்சியைச் சேர்ந்த ஞானவேல், செல்வம், தலைமையில் 10திற்கும் மேற்பட்டோர், தவெக கட்சியை சேர்த்த நிர்வாகிகள், புருஷோத்தமன், பார்த்திபன், சதீஷ், தலைமையில் 20க்கும் மேற்பட்டோர், நாம் தமிழர் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் சேட்டு, ராஜன், அஜித், தலைமையில் 20திற்கும் மேற்பட்டோர் என மொத்தம் 200க்கும் மேற்பட்டவர்கள் அவர்களது கட்சியிலிருந்து விலகி காஞ்சி மாவட்ட கழக செயலாளரும், உத்திரமேரூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான க.சுந்தர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்ட னர்.*

*மேலும், கட்சியில் புதிதாக இணைந்தவர்களுக்கு திமுக கட்சியின் சால்வை அணிவித்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. வரவேற்று பேசுகையில், அ.தி.மு.க. பா.ம.க. ஆகிய கட்சியிலிருந்து விலகி கழகத்தில் இணைந்துள்ளீர்கள் அதற்கு முதலில் வாழ்த்துக்கள் மகிழ்ச்சி, பெயர் விலாசம் ஆதார் அட்டை ஆகிய பட்டியல்களை பெற்று விரைவில் திமுக உறுப்பினர் அட்டைபெற்று தரப்படும் என பேசினார்.*

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 30.08.2025 சனிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 12.9.2025 அன்று தொழிலாளர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கூட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25-08-2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி



தஞ்சாவூர் மாநகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தை தஞ்சை பெண்கள் கிறிஸ்துவ மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு ”முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” விரிவாக்கத்தை சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (26.08.2025) சேலம், சிறுமலர் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி.மா.சாரதாதேவி, முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் மு.கபீர் ஆகியோர் உள்ளனர்.

### உரிமைகளை மீட்டெடுக்க தமிழகம் முன்னெடுக்கும் போராட்டத்தில்

# மற்ற மாநிலங்களும் ஓரணியில் திரள வேண்டிய நேரமிது!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.27–

உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய இடத்தில் மாநிலங்கள் இருக்கின்றன. தமிழகம் முன்னெடுக்கும் உரிமைப் போராட்டத்தில் மற்ற மாநிலங்களும் ஓரணியில் திரள வேண்டிய நேரமிது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தி யுள்ளது.

இதுகுறித்து 25.8.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:–



தினகரன்
ஆகஸ்ட் 25, 2025 திங்கட்கிழமை
அதிகார குவியல் அவசியமா?
உலகின் எந்தவொரு மூலையிலும் அதிகாரம் குவியத் தொடங்கினால் சர்வாதிகாரம் தானாகவே தலைதூக்கிவிடும். முடிவெடுக்கும் அதிகாரம் ஒருவர் கையில் குவியும்போது முறைகேடுகளும், அடக்குமுறைகளும் அவருக்கு கைவந்த கலையாகி விடுகிறது. இந்தியாவில் தற்போது 3வது முறையாக ஆட்சியில் இருக்கும் நரேந்திர மோடியும், அவர் தலைமையிலான ஒன்றிய அரசும் அதிகார குவியலை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சிகளையும், தங்களுக்கு பிடிக்காத மாநில அரசுகளையும் வேரோடு பிடுங்கி எறிய முற்படுகின்றனர்.

உலகின் எந்தவொரு மூலையிலும் அதிகாரம் குவியத் தொடங்கினால் சர்வாதிகாரம் தானாகவே தலைதூக்கிவிடும். முடிவெடுக்கும் அதிகாரம் ஒருவர் கையில் குவியும்போது முறைகேடுகளும், அடக்குமுறைகளும் அவருக்கு கைவந்த கலையாகி விடுகிறது. இந்தியாவில் தற்போது 3வது முறையாக ஆட்சியில் இருக்கும் நரேந்திர மோடியும், அவர் தலைமையிலான ஒன்றிய அரசும் அதிகார குவியலை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சிகளையும், தங்களுக்கு பிடிக்காத மாநிலக் அரசுகளையும் வேரோடு பிடுங்கி எறிய முற்படுகின்றனர். மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய நிதி பங்கீடுகளை முறையாக தருவதில்லை. தமிழகத்தில் திராவிட மாடல் அரசு 4 ஆண்டுகளாக மக்களுக்கு தீட்டி வரும் நல்ல பல திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதில் ஒன்றிய அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

இந்தி மொழி திணிப்பு, தமிழின் தொன்மையை அங்கீகரிக்க மறுப்பு என தமிழகத்தையும், திராவிட மாடல் ஆட்சியையும் இன்று வரை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அணுகி வருகிறது.

தனது ஊதுகுழலான அ.தி.மு.க.வையும், அரசியலமைப்பு சட்டத்தை மீறுவதற்காக தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கவர்னரையும் வைத்து கொண்டு, தினமும் அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் வந்த நாள் முதல் அடங்காத காளையாய் சுற்றி திரிந்த கவர்னர் ஆர்.என். ரவிக்கு, தமிழக அரசு சுப்ரீம் கோர்ட் படியேறி மூக்கணாங் கயிறு போட்டது. தமிழகத்தை முன்மாதிரியாக கொண்டே இன்று கேரளா, மேற்கு வங்கம், கர்நாடகா, பஞ்சாப் உள்ளிட்ட 8 மாநிலங்களின் எதிர்க்கட்சி முதல்வர்களும் மாநில உரிமைகளுக்காக ஒன்றிய அரசின் காலரைப் பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.

அதிகார குவிப்புகளை எதிர்த்து தி.மு.க. இன்று, நேற்றல்ல, காலம் காலமாய் யுத்தம் நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. 1967ல் அறிஞர் அண்ணா தொடங்கி, கலைஞரும் அதற்காக தனது முழக்கத்தை தொடர்ந்து எழுப்பினர். இதன் காரணமாகவே ஒன்றிய, மாநில உறவுகளை சீராய்வு செய்திட 1971ம் ஆண்டில் ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டது. இக்குழு அறிக்கை அடிப்படையில் தமிழக சட்டசபையில் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதை தொடர்ந்து 1983ம் ஆண்டில் ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட முன்னாள் நீதிபதி சர்க்காரியா தலைமையிலான குழு, அதிகார குவிப்பு குறித்து ஓரிடத்தில் விளாசியது. அதில் அளவுக்கு மீறிய அதிகாரங்களால் ஒன்றிய அரசுக்கு ரத்த கொதிப்பும், பல மாநில அரசுகளுக்கு ரத்த சோகையும் ஏற்பட்டுள்ளது என அன்றே மாநிலங்களின் அவலநிலையை படம் பிடித்து கூறியது.

அதன்பின்னர் 2007ம் ஆண்டில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக்காலத்தில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி புஞ்சி தலைமையிலான குழுவும், கவர்னர் நியமனம் குறித்து நல்ல பல பரிந்துரைகளை வெளியிட்டது. கவர்னர் என்பவர் கட்சி சார்பற்ற முறையில் இருக்க கேட்டுக் கொண்டது. மாநில முதல்வர்களின் கருத்துகளை கேட்ட பின்னரே கவர்னர் நியமனம் நடைபெற வேண்டும் எனவும் அக்குழு வலியுறுத்தியது. அரசியலமைப்பு சட்டம், தேர்தல் ஆணையம் என எதையுமே மதிக்காத இன்றைய ஒன்றிய அரசு, மாநில உரிமைகளை மட்டும் விட்டுத் தரவா போகிறது?. கேட்டால் கிடைக்காது. உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய இடத்தில் இன்று மாநிலங்கள் இருக்கின்றன. தமிழகம் இன்று முன்னெடுக்கும் இந்த உரிமை போராட்டத்தில், மற்ற மாநிலங்களும் ஓரணியில் திரள வேண்டிய நேரமிது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பெல் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் பெல் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 239/TRI, பேரவை இணைப்பு எண்.298) நிர்வாகக் குழுக் கூட்டம் 16.08.2025 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூட்டுக் குழு போராட்டம் நடவடிக்கை செப்டம்பர் 20 ஆம் தேதி வரை நீடிக்க உள்ள நிலை இருப்பதால் செப்டம்பர் 20 ஆம் தேதிக்குப் பின்னர் அல்லது போராட்டம் முடிவுக்கு வரும் நிலை இருந்தால் அதற்குப் பின்னர் தேர்தல் நடத்துவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் செப்டம்பர் 20 ஆம் தேதிக்குப் பின்னர் பெல் தொ.மு.சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தல் பேரவையால் நியமிக்கப்படும் ஆணையாளரைக் கொண்டு நடத்தி முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கலைஞரகம்**
சென்னை-17
நாள்: 25.08.2025

**(மு.சண்முகம்,)**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை



கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் இரயில் நிலையத்தில் பயணிகள் இரயில் நின்று செல்லும் என்று இரயில்வே துறை அறிவித்துள்ளது. அதை கொண்டாடும் வகையில் கோவை மாநகர் மாவட்டம், ஒண்டிப்புதூர் பகுதி கழகத்தின் சார்பில் பகுதி கழக பொறுப்பாளர் கஸ்தூரி பா.அருண் தலைமையில், பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் வெ.சசிகுமார், நந்தாநகர் பகுதி பொறுப்பாளர் எஸ்.எம்.சாமி முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதில் பகுதி அவைத்தலைவர் என். டி.சின்னச்சாமி, வட்ட கழகச் செயலாளர்கள் ராஜேந்திரன், த.சுரேஷ் குமார், LPF சண்முகம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட குப்பையன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திறன்மிகு வகுப்பறையை (SMART CLASS) மாணவர்கள் பயன்பாட்டிற்காக புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கழக மூத்த முன்னோடி வை.கோ. ராஜன் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் மணிவண்ணன் ஒன்றிய துணைச் செயலாளர் ராஜலிங்கம் ரமேஷ், ரஜினி குமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பினர், பள்ளி ஆசிரிய பெருமக்கள், பொதுமக்கள், மாணவ செல்வங்கள் உடன் இருந்தனர்.